LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom Online வகுப்புக்கள்

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்





ICT

Maths English

Tamil History

Science

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

Contact

76667-4945

ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர்
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர்
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் -
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம்
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் -
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர்
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர்

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOS AND FOR THE AWARD OF BURSARIES

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2023

வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

பரீட்சை - 02

சுட்டெண் .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரிட்சகர் முதலாது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதானபரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புளிகள் சரியாகும்.	V/I/T/CH

பக்கம் 2 ஐப் பார்க்க

www.ikeau.lk

மாதத்தின் முதல் வாரம் தரம் 06 தொடக்கம் 11 வரையான
தமிழ் மீடியம் வகுப்புக்கள் இலவசம்
விரும்பியவர்கள் பங்குபற்றலாம்

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்


Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

Face book - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்


● உருக்களை அவதானித்து 1, 2 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

1. கட்டத்தின் உள்ளே உள்ள உருவிற்கு மெருமளவில் ஒத்ததாக உள்ள உருவைத் தெரிக.




(1) (2) (3)

2) முதலில் தரப்பட்டுள்ள உருவோடு ஒத்திராத உருவைத் தெரிக.



(1) (2) (3)


3) கோலத்திற்கேற்ப அடுத்து வரும் உருவைத் தெரிக.



(1) (2) (3)


● 4, 5 ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு எது?

4)




(1) (2) (3)

5)



(1) (2) (3)

6)



A B


உரு A இல் உரு B போன்று எத்தனை வடிவங்களை அவதானிக்க முடியும்?

(1) 12 (2) 17 (3) 19

சுட்டெண் .....


● 7, 8 ஆகிய வினாக்களில் கோலத்திற்கேற்ப ? அடையாளம் இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிக.


7)




(1) 96 (2) 240 (3) 120

8)







(1) 3 (2) 9 (3) 6

● 9, 10 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள இரண்டு சொற்களும் தொடர்புபடும் தன்மைக்கேற்ப பொருந்துகின்ற சொற்சோடியைத் தெரிக.

9) **தராசு : நிறை**

(1) நேரம் : கடிகாரம்
(2) கொள்ளளவு : லீற்றர்
(3) மீற்றர்கோல் : நீளம்

10) **மரம் : பட்டை**

(1) மலர் : மணம்
(2) செம்மறியாடு : கம்பளி
(3) கடதாசி : வைக்கோல்

11) கீழே உள்ள பந்தியின் வெற்றிடங்களில் இடம் பெறுவதற்கு பொருத்தமான சொற்கூட்டத்தைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.


கோழிக் குஞ்சுகளைக் கண்ட .....A..... சத்தமாகக் கரையத் தொடங்கின. கோழிக் குஞ்சை .....B..... செல்ல வந்த காகத்தைத் தாய்க்கோழி புலி போல .....C..... தடுத்தது.

(1) A - காகம் B - தாக்கிச் C - விரைந்து
(2) A - காகங்கள் B - தூக்கிச் C - பாய்ந்து
(3) A - காகங்களின் B - அருகில் C - பறந்து

12) மாம்பழம் ஒன்று 20.00 ரூபாவிற்கும் தோடம்பழம் ஒன்று 35.00 ரூபாவிற்குமாக 11 பழங்களை வாங்கிய நிசாந்தன், 310.00 ரூபாவைச் செலுத்தினான். எனின் நிசாந்தன் வாங்கிய தோடம் பழங்களின் எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 5 (3) 7

www.ikeou.lk

13)  கணிதச் செய்கைகளின்படி ❖ எனும் குறியீட்டின் பெறுமதியாக இருக்கக் கூடியது

(1) 3 (2) 4 (3) 6



14) கவிதை தொடர்பாக வினவப்படுவதற்கு சரியான விடையைத் தெரிக.

குயவன் செய்த பானையும்
கொல்லன் தந்த ஆணியும்
தொழிலின் திறனைக் காட்டுமே
உழைப்பின் மகிமை ஆகுமே

கவிதை வரிகளால் உணரப்பட வேண்டியது.

(1) கொல்லனின் திறனை
(2) குயவனின் பானையை
(3) தொழிலாளர் உழைப்பின் மகிமையை

15) சரியான விடையைத் தெரிவு செய்க.

 எனின்  ஆகிய குறியீடுகளின் பெறுமானங்கள் முறையே

(1) 51, 40 (2) 41, 50 (3) 50, 41


16) ஒரு பால் வியாபாரி தன்னிடமிருந்த 35***l*** 750***ml*** பால் முழுவதையும் இரண்டு பாத்திரங்களில் ஊற்றி வைக்க வேண்டி இருந்தது. அவ்வாறு ஊற்றிய பின்பு சிறிய பாத்திரத்தை விடவும் பெரிய பாத்திரத்தில் 7***l*** 250***ml*** பால் அதிகம் இருப்பதாகக் கூறினார். எனின் பெரிய பாத்திரத்தில் உள்ள பாலின் அளவு யாது?

(1) 28***l*** 250***ml*** (2) 21***l*** 500***ml*** (3) 18***l*** 125***ml***

17) மேசை ஒன்றின் மீது வைக்கப்பட்டுள்ள கடிகாரம் ஒன்றின் நேரம் 6 மணியாகும். அக்கடிகாரத்தின் நிமிட முள் வடமேற்குத் திசையில் அமைந்திருக்குமாயின். மணி முள் எத்திசையைக் காட்டும்?

(1) வடகிழக்கு (2) தெற்கு (3) தென்கிழக்கு

18) மூன்று நிலைகளில் காட்டப்பட்டுள்ள தாயக்கட்டை ஒன்றின் தோற்றங்கள் இவை எனின் இலக்கம் இரண்டு உள்ள முகத்திற்கு எதிர் முக இலக்கம் எது?




(1) 6
(2) 5
(3) 3

www.ikedu.lk

19) ஐந்து நண்பர்கள் நீர்நிலை ஒன்றில் ஒன்றாக அரை மணி நேரம் நீராடிவிட்டு வெளியேறினர். எனின் அவர்களில் இருவருக்கு நீராட எடுத்த நேரம் எவ்வளவு?

(1) 1 மணித்தியாலம் (2) 12 நிமிடங்கள் (3) 30 நிமிடங்கள்

20) 

தரப்பட்ட உருவில் காணப்படும் முக்கோணிகளினதும் செவ்வகங்களினதும் எண்ணிக்கை முறையே

(1) 5 உம் 5 உம்

(2) 4 உம் 5 உம்

(3) 5 உம் 4 உம்

21) தரம் 5 வகுப்பில் மாணவர்களுக்கு பரீட்சைக்கான சுட்டெண்களாக 001 தொடக்கம் 100 வரை உள்ள எண்களை ஆசிரியர் கொடுத்தார். எந்தவொரு மாணவரும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 13 வரக்கூடிய எண் எதனையும் பெற விரும்பவில்லை. எனின், அத்தகைய எண்கள் எத்தனை மாணவர்களுக்குக் கிடைத்திருக்கும்?

(1) 6 (2) 10 (3) 7

22) A என்னும் நகரத்திலிருந்து B என்னும் நகரத்திற்கான தூரம் 50 km ஆகும். A, B நகரங்களுக்கிடையே C என்னும் நகரம் அமைந்துள்ளது. C இலிருந்து B இற்கு உள்ள தூரமானது A இலிருந்து C இற்கு உள்ள தூரத்தின் நான்கு மடங்கு ஆகும். A இற்கும் C இற்கும் இடையேயுள்ள தூரம் எவ்வளவு?

(1) 40 km (2) 25 km (3) 10 km

உவமானத்திற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தைக் காட்டும் விடையைத் தெரிக.


23) "எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல்"

(1) துன்பத்திற்கு மேல் துன்பம் வருதல்

(2) மேலும் கோபமூட்டச் செய்தல்

(3) துன்பத்தில் உதவி செய்தல்

24) உருவில் உள்ள வெள்ளை நிறப் புள்ளியானது கடிகார முட்கள் சுழலும் திசை வழியாக ஒரு எல்லையிலிருந்து மறு எல்லைக்கு நகரும். கறுப்பு நிறப் புள்ளியானது கடிகார முட்கள் சுழலும் திசைக்கு எதிர்த் திசையாக ஒரு எல்லையிலிருந்து ஒன்றுவிட்டு ஒன்றுக்கு நகர்ந்து செல்லும். இரண்டும் ஒன்றையொன்று சந்திக்கும் இடம் எது?




(1) C (2) F (3) D

25) வருடமொன்றில் ஜனவரி முதலாந் திகதி திங்கட் கிழமையாகும். அவ்வருடத்தில் உள்ள திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை என்பவற்றின் எண்ணிக்கை 106 ஆகும். எனின் அவ்வருடம் யாது?

(1) 2023 (2) 2021 (3) 2024

26)



உரு அமைந்துள்ள விதத்திற்கேற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.


(1)


(2)


(3)

27) பரீட்சை ஒன்றுக்கு சித்திப் புள்ளி 30 ஆக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்பரீட்சைக்கு ஐந்து மாணவர்கள் தோற்றினர். அவர்கள் அனைவரும் பரீட்சையில் சித்தியடைந்தனர். அவர்கள் ஐவரும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை 155 ஆகும். பரீட்சையில் உச்சப் புள்ளிகளைப் பெற்ற இரண்டு மாணவர்கள் இருப்பார்களாயின், அவ் உச்சப்புள்ளி எத்தனையாக இருக்கும்?

(1) 31 (2) 32 (3) 33

28)



A



B

A, B எனும் இரண்டு பொதிகளில் உள்ள மணலின் நிறைகள் உருக்களில் காட்டப்பட்டுள்ளது. மாணவர் குழுச் செயற்பாடு ஒன்றின் போது பொதி A யிலிருந்து 8kg 500g அளவான மணலை பொதி Bயில் சேர்க்கப்பட்டதோடு B பொதியிலிருந்து 7kg 750g அளவிலான மணல் பொதி A யில் இடப்பட்டது. எனின் தற்போது B பொதியினை விடவும்


(1) A யில் 3kg 250g அதிகம் உள்ளது.


(2) A யில் 3kg 350g குறைவாக உள்ளது.

(3) A யில் 3kg 350g அதிகமாக உள்ளது.

29) ஒரு இயந்திரம் வெவ்வேறு வர்ணங்களில் இறப்பர் பந்துகளை உற்பத்தி செய்கின்றது. அந்த இயந்திரம் ஒவ்வொரு 8 வேறு நிறப் பந்துகளுக்கு இரண்டு சிவப்பு நிறப் பந்துகளை உற்பத்தி செய்கின்றது. அதன்படி 12 சிவப்பு நிறப் பந்துகள் உற்பத்தி செய்யப்படும் போது இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்படும் இறப்பர் பந்துகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 48 (2) 96 (3) 60

30)  மாணவனொருவன் காட்போட் அட்டையில் வரைந்து வெட்டி வேறாக்கப்பட்ட வடிமொன்றினை நான்கு பகுதிகளாக வெட்டினான். அவை அருகில் உள்ள அடைப்பினுள் தரப்பட்டுள்ளது. ஆயின் மாணவனால் வெட்டப்பட்ட வடிவம் பின்வருவனவற்றுள் யாதாக இருக்கும்?



(1)



(2)



(3)

31) 'Z X F K P' என்பதை Y W E J O என எழுதினால் 'S T N I C' என்பது எழுதப்படும் விதத்தினைத் தெரிக.

(1) R S M H B (2) W R M H B (3) R S N H B

32) எனது சகோதரனுக்கு என்னை விடவும் இரண்டு வயது அதிகம். எனது சகோதரிக்கு சகோதரனை விட நான்கு வயது அதிகம். எனது சகோதரியின் தற்போதைய வயது 20 ஆகும். எனது தாய்க்கு 32 வயதாக இருக்கும்போது நான் பிறந்தேன். எங்கள் நால்வரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 96 ஆகும். எனின் எனது தாயின் தற்போதைய வயது எத்தனை?

(1) 35 (2) 46 (3) 38

33) பாடசாலைத் தேநீர் இடைவேளையின் போது சதுர வடிவ மேசை ஒன்றைச் சுற்றிப் போடப்பட்டிருந்த நான்கு கதிரைகளிலும் ஆயிஷா, பாத்திமா, ஷாமிளா, காவியா ஆகியோர் அம்ர்ந்திருந்தனர். ஆயிஷாவிற்கு இடது புறமாக ஷாமிளா அமர்ந்திருக்கிறாள். பாத்திமாவிற்கு வலது பக்கமாக காவியா அமர்ந்துள்ளாள். ஷாமிளாவிற்கு நேரெதிரே பாத்திமா அமர்ந்திருக்கிறாள். எனின் ஆயிஷாவிற்கு வலது புறமாக அமர்ந்திருப்பது யார்?

(1) காவியா (2) ஷாமிளா (3) பாத்திமா

www.ikeou.lk

34) தோட்டமொன்றில் கத்தரிச் செடிகளும் வெண்டிச் செடிகளுமாக ஒரு நிரையில் நடப்பட்டிருந்தன. ஒவ்வொரு கத்தரிச் செடியையும் அடுத்து இரண்டு வெண்டிச் செடிகள் நடப்பட்டிருந்தன. எல்லாமாக 32 செடிகள் உள்ள இந்நிரையில் முதலில் காணப்படுவது கத்தரிச் செயடியாகும். நிரையில் உள்ள வெண்டிச் செடிகளின் எண்ணிக்கை யாது?

(1) 20 (2) 21 (3) 16

35) சாந்தி நந்தினியின் மகள். ராதிகா சாந்தியின் சகோதரி. நந்தினி கமலாவின் மகள் எனின் ராதிகா கமலாவுக்கு என்ன உறவு?

(1) பேர்த்தி (2) மருமகள் (3) மகள்

36) ஒரு கடிகாரத்தின் மணி முள்ளும் நிமிட முள்ளும் பகல் 12.00 மணிக்கு ஒன்றை ஒன்று சந்தித்த பின் மீண்டும் எவ்வளவு நேரத்தில் அவை மீண்டும் சந்திக்கும்?

(1) 1 மணித்தியாலம் 10 நிமிடத்தில்
(2) 1 மணித்தியாலம் 6 நிமிடத்தில்
(3) 1 மணித்தியாலம் 25 நிமிடத்தில்


37) மூன்று நண்பர்கள் கடைக்குச் சென்று பலூன்களை வாங்கினர். அஜந்தன் நீலம், பச்சை, சிவப்பு நிறங்களிலும் விமல் பச்சை, நீலம், வெள்ளை நிறங்களிலும் கஜன் ஊதா, நீலம், பச்சை ஆகிய நிறங்களிலும் பலூன்களை வாங்கினர். அஜந்தன், விமல் ஆகியோரிடம் இல்லாத கஜனிடம் மாத்திரம் உள்ள பலூனின் நிறம் யாது?

(1) பச்சை (2) வெள்ளை (3) ஊதா

38) ஒரு மாணவன் தவணைப்பரீட்சை ஒன்றில் கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று பாடங்களில் பெற்ற சராசரிப் புள்ளிகள் 72 ஆகும். கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் முறையே 80. 70 ஆகிய புள்ளிகளைப் பெற்றிருந்தான் எனின், தமிழ் பாடத்தில் அவன் பெற்ற புள்ளிகள் எத்தனை?

(1) 66 (2) 72 (3) 75

39)



உரு A ஐப் போன்ற சம அளவுகளுடைய நான்கு அட்டைகீலங்களை தடித்த அட்டை ஒன்றில் ஒட்டிப் பெறப்பட்ட வடிவத்தை உரு B காட்டுகிறது. உரு B இன் சுற்றி வர உள்ள நீளம் யாது?

(1) 36cm (2) 32cm (3) 40cm

40) முதலாந் திகதி வெள்ளிக்கிழமை தொடங்கிய கண்காட்சி ஒன்று, வார இறுதி நாட்கள் தவிர்ந்த ஏனைய வாரநாட்களில் நடைபெற்றது. கண்காட்சி 7 நாட்கள் நடைபெற்று முடிவடைந்தது எனின், கண்காட்சி முடிவடைந்த தினம் யாது,?

(1) 7ந் திகதி வியாழன் (2) 11ந் திகதி திங்கள் (3) 9ந் திகதி சனி

www.ikeou.lk

ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர்
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர்
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர்
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர்
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர்
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர்
ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர் ஏறாவூர் கோட்டம் - ஏறாவூர்

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOS AND FOR THE AWARD OF BURSARIES

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2023

வினாத்தாள் - II

1மணி 15 நிமிடங்கள்

பரீட்சை - 02

சுட்டெண் .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் **உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளை **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- விடையின் கீழ் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களின் விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரிட்சகர் முதலாது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதானபரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புளிகள் சரியாகும்.	V/I/T/CH

பக்கம் 2 ஐப் பார்க்க



Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

01. கீழேயுள்ள பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடையை பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

நானும் எனது நண்பனும் கடற்கரை மணலில் அமர்ந்திருந்தோம். கடல் நீரைத் தொட்டு வந்த இதமான காற்று குளுகுளு என்று இருந்தது. மலைகளைப் போல எழுந்து வந்த அலைகள் எமது கால்களைத் தொட்டுச் சென்றன. சிறு நண்டுகள் அங்குமிங்கும் ஓடித் திரிந்தன. மீனவர் மீன் பிடிக்கச் செல்வதற்காக தமது படகுகளை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தனர். இவற்றையெல்லாம் இரசித்துக் கொண்டிருந்த நாங்கள் இருள் பரவத் தொடங்கியதை உணர்ந்து மெதுவாக எழுந்து வீடு செல்லத் தயாரானோம்.

(i) பந்தியிலுள்ள காட்சிகள் எவ்வேளையில் நிகழக்கூடியவை?

.....

(ii) பெயரடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக

.....

(iii) பந்தியிலுள்ள இணைமொழிச் சொல் ஒன்றை எழுதுக

.....

(iv) பந்தியில் காணப்படும் இரட்டைக் கிளவியை எழுதுக

.....

(v) உயர்திணை, தன்மை, இறந்தகால வினைச்சொல்லை எழுதுக

.....

(vi) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உவமானம் யாது?

.....

2. உயர்திணை, படர்க்கை, பலர்பால், பெயர்ச்சொல்லைத் தெரிவு செய்க.

மாணவன், ஆசிரியர், பறவைகள், விவாசாயிகள்

3. பண்டைய / நாம் / விளையாட்டுக்களை / நம் / விட்டோம் / முற்றிலும் / மறந்து

.....

.....

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடைப்புக்குள் அடையாளம் இடுக.

(i) நட்சத்திரக் கூட்டம் வானில் மின்னியது. ( )

(ii) நான் எனது தங்கையுடன் பூந்தோட்டத்திற்குச் சென்றோம். ( )

(iii) சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் போனறன. ( )

(iv) ஆசிரியருடன் மாணவனும் சேர்ந்து பாடலைப் பாடினர். ( )

5. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

போட்டி நிகழ்ச்சிகளுக்கு தயாராகி விட்டீர்களா பிள்ளைகளே என்று ஆசிரியர் மாணவர்களிடம் வினவினார்

www.ikeau.lk

சுட்டெண் .....

6. (i) எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா

.....

(ii) விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது

.....

7. பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளை எழுதுக.

(i) கோபம் சிந்தனைக்கு இடையூறாக அமையும்.

.....

(ii) எதையும் ஆராய்ந்து பார்க்காமல் செய்தல் கூடாது.

.....

8. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரும் வெளிப்படுத்தும் கருத்தைத் தெரிவு செய்து எழுதுக.

(i) கண் திறத்தல் .....

(ii) தட்டிக்கழித்தல் .....

அறிவு உண்டாதல் / சாக்கு போக்குச் சொல்லுதல் / தட்டிக் கொடுத்தல் / நித்திரை செய்தல்

9. தரப்பட்டுள்ள சொற்களுள் சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்க.


(i)	(1) வெக்கம்	(2) வெட்கம்	(3) வெற்கம்
(ii)	(1) இலட்சினை	(2) இலட்ச்சினை	(3) இலச்சினை
(iii)	(1) வெந்நீர்	(2) வெண்ணீர்	(3) வென்னீர்

10. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தரப்பட்ட கட்டங்களுக்குள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i)



(ii)



11. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) you / How / do / many / have? / sisters

.....

(ii) can / a / I / house / see

.....

www.ikeou.lk

12. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்சொல்லை** எழுதுக.

(i) meat :..... (ii) plough :.....

13. 'சோதன்ன (**සෝදන්න**)' என்ற சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

.....

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினை **தமிழில்** எழுதுக.

ஒபே அங்கய கீயத? :.....

..

15. 'பதினோராயிரத்து எண்பத்தொன்பது' இந்த எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....

16. பின்வரும் எண்ணை இடப்பெறுமானத்திற்கு அமைய விரித்தெழுதுக.

9630 = ... + ... + ... + ...


17. பின்வரும் மூன்று எண்களையும் ஏறுவரிசையில் மீண்டும் எழுதுக.

19630, 18800, 19603 ....., ..., ...

18. பின்வரும் கோலத்தில் அடுத்து வரவேண்டிய **இரண்டு** எண்களையும் எழுதுக.

18, 25, 32, 39 , ... , ...

19.



உருவில் உள்ள பென்சிலின் நீளம் எவ்வளவு?

.....cm

20. புகையிரத நிலையமொன்றில் ஒரு நாளில் 3096 பேர் பிவேசித்தனர். 1989 பேர் வெளியேறினர். பிரவேசித்தோர் தொகைக்கும் வெளியேறியோர் தொகைக்கும் இடையிலான வித்தியாசம் யாது? .....

21. பொதியொன்றில் இருந்த 36 பலூன்களில் $\frac{3}{4}$ பங்கு பலூன்கள் சிவப்பு நிறப் பலூன்கள் ஆகும். ஆயின் பொதியில் உள்ள ஏனைய நிற பலூன்களின் எண்ணிக்கை யாது? :.....

22. (i) தரப்பட்ட உருவில $\frac{4}{10}$ பகுதியை (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந் தீட்டுக.

(ii) நிழற்றப்படாது எஞ்சிய பகுதியை தசம எண்ணாக எழுதுக. :.....



www.ikeou.lk

(iii) 515 தோடம் பழங்களை ஒரு பையில் 5 பழங்கள் வீதம் இடுவதற்குத் தேவையான பைகள் எத்தனை?

.....

23. A எனும் நகரத்திலிருந்து B எனும் நகரத்தின் வழியே C எனும் நகரம் வரையிலான பாதையின் நீளம் ***17km 650m*** ஆகும். A யிலிருந்து B வரையிலான நீளம் ***7km 850m*** ஆயின், B யிலிருந்து C வரையிலான நீளம் எவ்வளவு?

:.....***km*** .....***m***

24. பாரவூர்தி ஒன்றின் எரிபொருள் தொட்டியில் பயண ஆரம்பத்தின்போது 47***l*** 500***ml*** எரிபொருள் அடங்கியிருந்தது. பயண முடிவில் 18***l*** 900***ml*** எரிபொருள் மீதியாக இருந்ததாயின், இப்பயணத்திற்குச் செலவாகிய எரிபொருளின் அளவு யாது?


:.....***l*** .....***ml***

25. ஒரு தென்னந்தோட்டத்திலிருந்து இரண்டு நாட்களில் பறித்த தேங்காய்களின் எண்ணிக்கை முறையே 1850 உம் 975 உம் ஆகும். இந்த இரண்டு நாட்களிலும் பறித்த மொத்தத் தேங்காய்கள் எத்தனை?

.....

26. *50* ***kg*** அரிசி இடக்கூடிய ஒரு சாக்குப் பையில் *32* ***kg*** *750* ***g*** அரிசி உள்ளது. அச்சாக்குப் பையை நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு அரிசியை அதனுள் இடவேண்டும். :.....***kg*** .....***g***

27. அட்டவணையைப் பூரணப்படுத்துக.


திண்மப் பொருள்	திணமத்தின் பெயர்	விளிம்புகளின் எண்ணிக்கை	முகங்களின் எண்ணிக்கை
	.....	.....	6
	.....	6	.....

28. 5kg சம்பா அரிசிப் பொதியொன்றின் விலை ரூபாய். 950.00 எனின், 1kg அரிசியின் விலை எவ்வளவு?

ரூபாய் ..... சதம் .....

www.ikeau.lk

29. மாணவர் குழுவொன்று மிருகக்காட்சிசாலையில் அவதானித்த பிராணிகள் பற்றிய தகவல்கள் கீழே உள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளன.



(i) மாணவர் குழு 11 முயல்களை அவதானித்தனர் எனின் அதனை வரைபில் நிழற்றிக் காட்டுக.

(ii) மாணவர் குழு மிருகக்காட்சிசாலையில் அவதானித்த பிராணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

- இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

(30) விலங்குகள் மூலம் பரம்பலடையும் வித்துக்கு உதாரணமாக இருப்பது எது?

(1) எருக்கலை (2) துத்திரி (3) வேங்கை

(31) இலங்கைக்கு மாத்திரம் உரித்தான தாவரங்கள்

(1) வேம்பு, தென்னை (2) தென்னை, தேயிலை (3) நிலவேம்பு, கடல்மா

(32) தாவர உண்ணிகளைக் கொண்ட விடையைத் தெரிக

(1) மயில், மைனா (2) முயல், அணில் (3) மாடு, கொக்கு

(33) பிராணிகளுக்கு பயன்தரக்கூடிய மனித செயற்பாடுகளில் ஒன்று

(1) பழ மரங்களை நட்டு வளர்த்தல்

(2) காவல் சேவைக்கு உதவுதல்

(3) சூழலை அழகுபடுத்தல்

(34) நெல்லில் உள்ள பதரை நீக்குவதற்குப் பயன்படும் உபகரணம்

(1) சுளகு (2) உரல் (3) அம்மி

(35) நீரூற்றுக்கள் வற்றாது பாதுகாக்க வளர்க்கப்படும் மரம்

(1) இலுப்பை (2) மருது (3) வாழை

(36) தபாலகமொன்றினால் எமக்குக் கிடைக்கும் சேவைகளுள் ஒன்று

(1) தேசிய அடையாள அட்டை வழங்குதல்

(2) வாகன அனுமத்திரத்தை வழங்குதல்

(3) காசுக்கட்டளை ஒன்றை மாற்றிப் பணம் பெறல்

www.ikeou.lk

(37) விற்றமின் C அதிகமுள்ள உணவுக்கு உதாரணமாக இருப்பது

(1) தாமரைக் கிழங்கு (2) கொய்யாப்பழம் (3) முளைக்கீரை

(38) எந்தக் கனியுப்புக் குறைபாட்டினால் குருதிச்சோகை நோய் ஏற்படுகிறது?

(1) கல்சியம் (2) அயடீன் (3) இரும்பு

(39) குறித்த வேளையில் உணவு உண்ணாதிருக்கும் நபரொருவருக்கு ஏற்படும் நோய்

(1) உயர் குருதியமுக்கம் (2) இரப்பையழற்சி (3) நீரிழிவு

(40) பின்வரும் நோய்களுள் நோய்க்காவிகளான ஆட்கள் மூலம் பரவும் நோய்

(1) யானைக்கால் (2) இரப்பையழற்சி (3) நீரிழிவு

(41) நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி மீது நீர்த்துளி ஒன்றை இடும்போது நிகழாதது?

(1) நீர் குளிர்ச்சியடையும் (2) ஒலி எழும் (3) நீர் ஆவியாகும்

(42) நீரைச் சுத்தப்படுத்த பயன்படும் நவீன முறையும் பண்டைய முறையும் முறையே

(1) குளோரின் இடல், பில்டர் மூலம் வடித்தல்

(2) பில்டர் மூலம் வடித்தல், கிணற்று நீருக்கு விறகுக் கறி இடல்

(3) கிணற்று நீருக்கு தேற்றாங்கொட்டை இடல், வடிகட்டித் தாளினால் வடித்தல்

(43) சூடான பான வகைகளைப் பரிமாறும்போது மிகப் பொருத்தமான பாத்திரம்

(1)  (2)  (3) 

(44) பயிர்களுக்கு சேதனப்பசளை பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மை

(1) நச்சுத்தன்மையற்ற உணவு கிடைத்தல்

(3) மண் வளம் பாதிக்கப்படல்

(3) உணவுப் பொருளுடன் நச்சுத்தன்மை சேர்தல்

(45) நாற்று மேடையிலிருந்து பிடுங்கி பாத்திகளில் நடப்படும் பயிர்கள்

(1) கத்தரி, பாகல் (2) கத்தரி, தக்காளி (3) மிளகாய், வெண்டி

(46) காந்தத்தால் கவரப்படும் பொருள்

(1) குண்டூசி (2) அலுமினியத் தகடு (3) கடதாசி

(47) பெரிய கல்லொன்றைப் புரட்டிச் செல்லப் பயன்படும் நுட்ப முறை

(1) சாய்தாளம் (2) கப்பி (3) நெம்புகோல்

(48) கூடைப்பந்தாட்டதின் போது ஓர் அணியில் விளையாடும் வீரர்களது எண்ணிக்கை

(1) 5 (2) 6 (3) 7

(49) அரச பேருந்துகளில் தனியான இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளோர்

(1) ஆசிரியர்கள் (2) அரச அதிகாரிகள் (3) வலது குறைந்தோர்

(50) போத்தலொன்றினுள் மண் மாதிரியின் ஒரு பகுதியை இட்டு கழுத்து வரை நீரை நிரப்பி நன்கு குலுக்கிய சிறிது நேரத்தின் பின் நீரின் மேற்பரப்பில் காணப்படுவது

(1) களிமண் (2) மணல் (3) உக்கல்கள்

பக்கம் 8 ஐப் பார்க்க

(51) புவிக்கு மிக அண்மையில் உள்ள கோள்


(1) வியாழன் (2) வெள்ளி (3) புதன்

(52) சிவனொளிபாத மலை அமையப்பெற்றுள்ள இரண்டு மாவட்டங்கள்

(1) கண்டி, நுவரெலியா

(2) இரத்தினபுரி, நுவரெலியா

(3) பதுளை, இரத்தினபுரி

(53) 

உடுக்கோலத்துக்கு வழங்கப்படும் பெயர் யாது?

(1) வேட்டைக்காரன்

(2) விருச்சிகம்


(3) கலப்பை

(54) மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்த மன்னன்

(1) தாதுசேனன் (2) பண்டுகாபயன் (3) மகாசேனன்

(55) தேசப்படங்களில் பெருந்தெருக்களைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம்

(1) கறுப்பு (2) ஊதா (3) சிவப்பு

(56) 

உருவில் உள்ள தையல் வகை

(1) கம்பளித் தையல் (2) சங்கிலித் தையல்

(3) நூலோடி

(57) பயிர்ச்செய்கைக்கு மிகவும் உகந்த மண் வகை

(1) இருவாட்டி மண் (2) களிமண் (3) மணல் மண்

(58) பொலித்தின், பிளாஸ்ரிக் கழிவுகளை இடும் குப்பைத் தொட்டியின் நிறம்

(1) செம்மஞ்சள் (2) சிவப்பு (3) பச்சை

(59) காற்றின் உதவியுடன் இயக்கப்படும் இசைக்கருவியாக அமையாதது

(1) நாதஸ்வரம் (2) வீணை (3) கொம்பு

(60) "எனது வீட்டுத்தோட்டத்தில் நான் நட்ட கத்தரிச் செடிகளில் அழகிய ஊதா நிறப் பூக்கள் மலர்ந்திருப்பதைக் கண்டேன்." இதனைத் தொடர்ந்து உமது மனதில் தோன்றும் எண்ணங்கள் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

❁ ----------

❁ ----------

❁ ----------

---

www.ikedu.lk